**07.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் இன்று (07.03.2020) இசை நிகழ்ச்சி நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, இன்று (07.03.2020) வண்ணாரப்பேட்டை மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் மாலை 05:00 மணி முதல் மாலை 07:00 மணி வரை "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" கலைக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து – இன்று (07.03.2020) நங்கநல்லூர்ச் சாலை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மாலை 5:30 மணி முதல் இரவு 7:30 மணி வரை "கமலா இசைப் பள்ளி"-யின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

**இதனைத் தொடர்ந்து நாளை 08.03.2020 (ஞாயிற்றுக்கிழமை)**

மாலை 05:30 மணி முதல் 07:30 மணி வரை வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) நிமிர்வு கலையகம் அமைப்பின் பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதைத் தவிர, **சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்புடன் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு** மெட்ரோ இரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் நாளை 08.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் வடபழனி, செனாய் நகர் மெட்ரோ, விமான நிலைய மெட்ரோ, ஆலந்தூர், அசோக் நகர் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ ஆகிய 6 மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

இந்த இலவச பொது சுகாதார முகாமில் பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை), இரத்த அழுத்தம், சீரற்ற இரத்த சர்க்கரை, ஆலோசனைகள் போன்றவை வழங்கப்படும்.

மெட்ரோ இரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.